1970 ஆகஸ்ட் 26]

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய நகரங்களில் வீடில்லாத பிரச்சனை பெரிய பிரச்சனையாக இருக்கிறது. உணவு பிரச்சினையில், நடவடிக்கை எடுத்து அந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கண்டிருப்பதைப்போல இந்த வீட்டுப் பிரச்சனைக்கும், ஒரு சிறப்புத் திட்டத்தை அமுல் படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, வீட்டு அடைமான வங்கிகள் வீடு கட்டக் கடன்கள் கொடுக்கிறார்கள். வீடு கட்டுவது, வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் இவை என்னுடைய சகா, அறநிலைய அமைச்சர் நிர்வாகத்தில் இருக்கின்றன.

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் ஒவ்வொரு ஆண்டும் பல கோடி ரூபாய்களை வீடு கட்டுவதற்கு என்று ஒதுக்கி வைக்கிறார்கள். அந்தப் பணத்தை நம்முடைய அரசு உபயோகிக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் அந்தச் சுழல்நிதி பற்றிச் சொல்கிறார்கள். அதில் 200 கோடி ரூபாய் இருக்கிறது என்று நினைக்கிறேன். அது பற்றி தனியாகக் கேட்டால், அறநிலைய அமைச்சர் பதில் கூறுவார்கள்.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே, பொதுவாகக் கிராமப் பகுதிகளில், வீடுகள் இல்லாமல் அவதிப்படுவதால், அதற்கும் நிலவள வங்கியிலிருந்து கடன் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, நில வள வங்கி நிலத்தைத்தான் வளமாக்க உதவும். வீடு கட்டுவது, வீட்டு வளவங்கிகள்தான் செய்ய முடியும். (சிரிப்பு)

திரு. பி. ஜி. கருத்திருமன்: இந்த வங்கிகள் சில கட்சிகளையும் வளமாக்குகின்றன என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

(பதில் இல்லை.)

தூத்துக்குடியிலுள்ள அரசினர் நிலங்கள்

*57. **வின.—திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் சர்க்காருக்குச் சொந்தமான சுமார் 300 எக்கரா பூமி, தனிப்பட்ட ஒருவருக்கு வருடம் ஒன்றுக்கு எக்கரா ஒன்றுக்கு 75 பைசா வீதம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எத்தனை ஆண்டுகளுக்கு?

(உ) குத்தகைக் காலம் முடிந்து விட்டதா?

(எ) ஆம் என்றால், மேலும் நீடிக்கும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) & (இ) தூத்துக் குடித் துறைமுகத்துக்குச் சொந்தமான இந்த நிலங்கள் தூத்துக்குடி உப்புத் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலைக்கு 20 ஆண்டுக்கால குத்தகைக்கு ஆண்டுக்கு ஒரு ஏக்கருக்கு எழுபத் தைந்து பைசா வீதம் விடப்பட்டன.

(உ) இந்தக் குத்தகை 7—7—1968-ல் முடிந்து விட்டது.

(எ) அந்தக் குத்தகை நீடிக்கப்படவும் இல்லை, நீடிக்கும் உத்தேசமும் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், துறைமுகம் கட்டும் இந்த நேரத்தில், அதற்கு முட்டுக்கட்டையாக 300 ஏக்காரவை காலி செய்து, சர்க்கார் இடத்தில் வைக்கவில்லை. அப்படி இருப்பதன் காரணம் என்ன? குத்தகையை நீடிக்கவில்லை என்றாலும், உடனடியாகக் காலி செய்து சர்க்காரிடம் கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே. மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒரு விஷயத்தை மனதில் வைக்க வேண்டும். இப்பொழுது இருக்கக்கூடிய பழைய துறைமுகம் வேறு. அது மாநில அரசின் நிர்வாகத்தில் இருக்கிறது. புதிதாகப் பெரிய துறைமுகம் கட்டப்படுவது வேறு. அதன் விஸ்தரிப்புக்காக இந்த நிலம் தேவையில்லை என்று மத்திய சர்க்கார் தெரிவித்திருக்கிறது. ஏற்கனவே உள்ள பழைய துறைமுகத்திற்கு இது தேவைப்படுவதால் குத்தகை நீடிக்கப்பட வில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், நீடிக்கப்படவில்லை என்று சொன்னாலும், இந்த 300 ஏக்கரா அந்தக் குறிப்பிட்ட நபரிடத்தில் இருக்கிறது. அதைக் காலி செய்ய ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவு போட்டிருக் கிறது. அதில் ஏற்கனவே 37 ஏக்கர் கைப்பற்றியாகிவிட்டது. இப்பொழுது தொழிற்சாலை வசம் இருப்பது 263 ஏக்கர்தான். இதைக் காலி செய்ய உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தூத்துக்குடி துறைமுகத்திற்காக உப்பளங்களிலிருந்து எல்லோரையும் வெளியேற்றும் போது, இந்த நபருக்கு மட்டும் வெளியேற்றுமல் தாட்சண்யம் காட்டப் படுவ தற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, இந்த அரசு தாட்சண்யம் யாருக்கும் காட்டுவது கிடையாது. ஒருவருக்கொருவர் பாரபட்சம் காட்டுவதும் கிடையாது. ஏறத்தாழ 263 ஏக்கர் இந்த நபர்வசம் இன்னும் இருக்கிறது. எல்லோரையும் போல் இவருக்கும், ஏற்கனவே இருந்த அரசு ஒரு ஏக்கருக்கு 75 பைசா வீதம், குத்தகையை மீண்டும் 25

1970 ஆகஸ்ட் 26]

ஆண்டுகளுக்கு தேவையானால் நீடிக்கலாம் என்று கையெழுத்துப் போட்டிருக்கிறது. ஆனால் அரசு துறைமுகத்திற்கு இந்த நிலம் தேவை என்று, வெளியேற்றம் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது.

Sri Kappaleeswarar Temple Tank

* 58 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether a scheme of silt removing was carried out in the Tank of Sri Kapaleeswarar Temple in Mylapore, Madras; and

(*b*) if so, what was the expenditure involved?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) சென்னை, மயிலையில் உள்ள ஸ்ரீகபாலீஸ்வரர் கோவில் குளத்தில் தூர் எடுக்கும் பணி தொடர்பாக ரூ. 500 செலவிடப் பட்டது.

திரு. கே. விநாயகம் : சார், இந்த கபாலீஸ்வரர் கோவில் குளத்தை ஆழம் செய்தபோது, மாண்புமிகு முதல் அமைச்சரும் சேர்ந்து கொண்டு கையில் மம்மட்டியும், கட்டப்பாரையும் பிடித்து, மண் எடுக்கும் போது, ஒரு பொருள் கிடைத்ததாமே, ஒரு புதை பொருள். அது யாரைச் சேர்ந்தது? யார் எடுத்துக் கொண்டார் கள்? கோவிலில் கொடுத்தார்களா? என்ன பொருள் இருந்தது, அது என்னவாயிற்று? அதை விளக்க முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஒரு சிறிய உண்டியல், புதுக் காசுகளோடு இருந்தது, யாரிடமும் கொடுக்கப்படவில்லை. விநயகர் கோவிலுக்குத் தருவதாக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி எண் 59 ஒத்தி வைக்கப்படுகிறது.

பழங்காநத்தம் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை

***60 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, பழங்காநத்தத்திலுள்ள E. S. I. மருத்துவமனை எந்தத் தேதியிலிருந்து செயல்பட்டு வருகிறது?

(இ) அந்த மருத்துவமனைக்குத் திறப்பு விழா எப்போது நடைபெற்றது?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகம் பழங்காநத்தத்தில் தனிப்பட்டவர்க்குச் சொந்தமான ஒரு வாடகைக் கட்டிடத்தில் 28–10–1956 முதல் செயல் படத் தொடங்கியது. அரசுக்குச் சொந்தமான கட்டிடத்தில் 12-2-1966 முதல் செயல்படத் தொடங்கியது.

(இ) இப் புதிய மருந்தகத்தைத் திறப்பதற்கென விழா ஏதும் நடத்தப்படவில்லை. பழங்காநத்தம், பொன்னகரம், திருநகர், முனிச்சாலைரோடு, பாவை ஆகிய இடங்களில் தொழிலாளர் நல